திரு. சொ. காவேரிமணியம் : பேரவைத் துணைத் தலைவரவர்களே, மதுரை மாவட்டத்தில் இந்தத் திட்டம் நிறைவேற்றப்பட ஒதுக்கப்பட்ட தொகை எவ்வளவு? இதில் எத்தனை பேர்களுக்கு இவ்வாறு வீடு கட்டிக் கொடுக்கப் படும்?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவரவர்களே, இதற்கு ஏறத்தாழ 16 லட்சம் ரூபாய், மதுரை மாவட்டத்திற்குப் பக்கத்தில் உள்ள இடத்தில் பர்மா அகதிகளுக்காக அங்கே வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன. 100 வீடுகள் கட்டப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, கோவையிலே தொழிலதிபர் திரு. ஜி. டி. நாயுடு அவர்கள் 1,000 ரூபாய்க்குக் குறைவான செலவில் வீடுகள் கட்டித் தருவதாகத் தெரிகிறது. இதற்குமுன்கூட நமது முன்னாள் பேரவைத் தலைவர் திரு. மதியழகன் தலைமையில் நாங்கள் குழுவாகச் சென்ற நேரத்தில், காலையிலே ஆரம்பித்து மாலைக்குள்ளாக மின் விளக்கு வசதியோடு கட்டிக் கொடுத்தக் காட்சியைப் பார்த்தோம். எனவே, ஏற்கனவே முன்னாள் பேரவைத் தலைவருடைய தலைமையில் சென்ற அந்தக் குழுவினிடத்தில் கேட்டு அந்த நிலையை மேற்கொள்ள அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : துணைத் தலைவரவர்களே. அந்த வீடுகள் கட்டப்பட்டதைப்பற்றி நான் பத்திரிகைகளின் வாயிலாக அறிந்திருக்கிறேன். அதனுடைய ஸ்திரத் தன்மையைப்பற்றிய நிலைமைகளை ஆராய்ந்துதான் முடிவெடுக்க வேண்டும். அப்படிப்பட்ட திடீர் வீடுகளினால் பயன் இருக்குமா என்று ஆராய்ந்துதான் முடிவெடுக்க வேண்டும்.

Quarters in Foreshore Estate

* 36 *Q.*—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Backward Classes be pleased to state—

(*a*) whether it is a fact that there are cracks in the Foreshore Estate constructions in the Santhome area in Madras City;

(*b*) if so, the details thereof; and

(*c*) the action taken thereon?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : (அ) பட்டினப்பாக்கத்தில் கட்டப் பட்டுள்ள கட்டடங்கள் எதிலும் விரிசல்கள் இல்லை.

(இ) & (உ) ; வினாக்களுக்கு இடமில்லை.